JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 129/2022 Date:12.09.2023 P.W. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெண்ணிலா |
| தந்தை பெயர், க/பெ | : | முருகன் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 12th day of September 2023.

1, 2 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது நம்பர் 4/575 வீராமாமுனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, ஜெ ஜெ நகர், சென்னையில் குடியிருந்து வருகிறேன். அசா.1 கிருஷ்டினா என்பவரை தெரியும். 19.06.2021ம் தேதி அசா்.1ன் வீட்டில் சாப்பிட்டுவிட்டு நாங்கள் தங்கியிருந்த ரூம்பிற்கு செல்வதற்காக நானும் கிருஷ்டினாவும் என்னுடைய பைக்கில் என்னுடன் ரூம்பில் தங்கியிருந்த சுசிலா ஓட்டிவந்தார். இரவு 10.00 மணியளவில் வேலம்மாள் பள்ளி அருகே கண்ணதாசன் தெரு அருகே சென்றபோது அப்பொழுது R15 பைக்கில் வந்த இரண்டு நபர்கள் எங்களை பின் தொடர்ந்து வந்து அந்த நபர்கள் எங்களை வழிமடக்கி என் பைக்கை ஓட்டி வந்த சுசிலாவிடம் இருந்த எனது பைக்கை பிடிங்கி சென்றுவிட்டார்கள். அப்பொழுது அங்கியிருந்த பொது மக்கள் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்கள். அப்பொழுது போலீசார் இரவு 10.30 மணி என்பதனால் காலையில் வந்து புகார் கொடுக்க சொன்னார்கள்.

2. என்னுடைய இருசக்கர வாகன பதிவு எண் டிஎன் 85 சி 9128 எமஹா ரே எக்ஸ ரே என்ற எனது வாகனத்தை தான் அவர்கள் பறித்து சென்றனர். இரவு நேரம் என்பதனால் அந்த நபர்களை என்னால் சரியாக அடையாளம் காணமுடியவில்லை. அவர்கள் ஆஜர் எதிரிகள் தானா என்று எனக்கு தெரியவில்லை. நாங்கள் புகார் கொடுத்தோம் அதன்பின்பு ஒரு மாதம் கழித்து வண்டி கிடைத்ததாக போலீசார் கூறினார்கள். நான் ஜெ ஜெ நகர் காவல் நிலையம் சென்று என் வண்டியை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3. இந்த வழக்கு சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்றால் கிருஷ்டிணா என்பவர் புகார் கொடுத்தார். புகார் கொடுப்பதற்கு நான் புகார்தாரருடன் சென்றேனா என்றால் சென்றேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் அசா.1 கிருஷ்டிணா எழுதினார். சம்பவம் நடந்த இடம் வேலம்மாள் பள்ளிக்கு வளாகத்திற்கு பின்புறம் என்றால் சரிதான். அங்கு எப்பொழுதும் பள்ளியின் காவலாளிகள் இருப்பார்கள் என்றால் சம்பவத்தின் போது அங்கு காவலாளிகள் யாரும் இல்லை. பள்ளி வளாகத்தில் சம்பவயிடத்திற்கு அருகில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுயிருந்தது என்றால் சரிதான். வாகனத்தை பறிகொடுத்த சுசிலா என்பவரும் புகார் கொடுக்க எங்களுடன் வந்தாரா என்றால் வந்தார்.

சுசிலா தனிப்பட்ட முறையில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்தோ அல்லது சிறைச்சாலையில் வைத்தோ அடையாள அணிவகுப்பு ஏதேனம் நடத்தினாாகளா என்றால் இல்லை. சுசிலா என்பவர் எனக்கு பின்னால் தான் இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டியிருந்தார் என்றால் சரிதான்.

4. சுசிலாவிடமிருந்து இருசக்கர வாகனத்தை பறித்த நபர்களை நானும் அசா.1 கிருஷ்டிணாவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது பொதுமக்கள் சம்பவயிடத்தில் அதிக நபர்கள் இருந்தார்கள் என்றால் இல்லை, சம்பவம்நடந்த பின்னர் நாங்கள் சத்தம் போட்டதை கேட்டு தான் சம்பவயிடத்திற்கு பொதுமக்கள் வந்தார்கள். போலீசார் சம்பவயிடத்திற்கு எப்பொழுது வந்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்று 10, 15 நிமிடத்தில் போலீசார் வந்துவிட்டார்கள். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். நாங்கள் உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோமா என்றால் மறுநாள் காலையில் வந்து புகார் கொடுக்கும்படி போலீசார் அறிவுறுத்தியதால் மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். சம்பவயிடத்திற்கு போலீசார் வந்த விவரத்தையும் மறுநாள் காலை காவல் நிலையம் வந்து புகார் கொடுக்கும்படி போலீசார் அறிவுறுத்தியதையும் நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன்.

5. நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என்னுடைய தோழி வேறு இடத்தில் இருசக்கர வாகனத்தை தொலைத்துவிட்டார் என்றாலும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் வழக்கிற்காக சம்பவத்தை மிகைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியது போல் சம்பவம் நடைபெற்றுயிருந்தால் என்னுடைய தோழி சுசிலா தான் புகார் கொடுத்துயிருப்பார் என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur